மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 365, திரு. இராம. இராமநாதன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. சி. இராமசுவாமி கேட்கிறார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

365-

கும்பகோணத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை ஏற்படுத்துதல்

***22415-**திரு. இராம. இராமநாதன்:*

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான இடத்தில் பணிமனை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கும்பகோணத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை ஒன்று தனியாருக்குச் சொந்தமான நிலம் மற்றும் கட்டிடத்தில் வாடகை அடிப்படையில் இயங்கி வருகிறது. இந்நிலத்தினைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து தஞ்சாவூருக்குச் செல்லும் பேருந்துகள் அனைத்தும் அதாவது பெரும்பாலான பேருந்துகள் சேத்தியாதோப்பு, கும்பகோணம் வழியாகச் செல்கின்றன. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் அங்கே பொதுவாக இருக்கின்ற பொது பஸ் ஸ்டாண்டில் சென்று தங்குகின்றன. எனவே அங்கே அந்தக் கழகத்திற்குச் சொந்தமான இடம் இருப்பதால் இந்த ஆண்டே அதைக் கட்டித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தினுடைய மதிப்பு 20,50,000 ரூபாய். அதற்கு மேலே கட்டிடம் கட்டவேண்டி இருக்கிறது. இப்போது அங்கே தனியாரிடத்திலே கட்டிடங்களோடு இருக்கின்ற அந்த நிலத்தின் மொத்தப் பரப்பளவு 35 ஆயிரம் சதுர அடி. ஆகவே

அந்த நிலமே, அந்தக் கட்டிடமே போதும் என்கிற காரணத்தால்தான் இப்போது அதிலே பேருந்துகளை நிறுத்திக்கொண்டிருக்கிறோம். திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்ததைப் பொறுத்தவரையிலே கூடுதலாக சில பணிமனைகளை அமைப்பதற்கு முன்னால் அதிலே வருவாய் கூடுதலாக வருவதைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு அந்தப் போக்குவரத்துக் கழகம் மேலும் லாபமீட்டுகிறபோதுதான் புதிய பணிமனைகளை நாங்கள் துவக்குவதற்கு உத்தேசித்திருக்கிறோம். ஆகவே இப்போது வாடகைக் கட்டிடத்தில் இயக்குவது சாத்தியக்கூறாக இருக்கின்ற காரணத்தினாலே தொடர்ந்து இயக்கப்படும்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 366, டாக்டர் எஸ். சுந்தரராஜ். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

366–

இராமநாதபுரம் மாவட்டம், அச்சங்குளம் கூட்டுறவு நூற்பாலையில் பணிபுரிபவர்களை நிரந்தரம் செய்தல்.

***23868*-டாக்டர் எஸ். சுந்தரராஜ்:**

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், அச்சங்குளத்தில் இயங்கிவரும் கூட்டுறவு நூற்பாலையில் பணி நிரந்தரம் இல்லாமல் பல வருடங்களாக வேலை செய்பவர்களை பணி நிரந்தரம் செய்ய அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராமநாதபுரம் மாவட்டத்தில் அச்சங்குளத்தில் இயங்கிவரும் கூட்டுறவு நூற்பாலையில் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்வு செய்யப்படாமல் நியமிக்கப்பட்ட 67 நபர்களை பணி நிரந்தரம் செய்யும் பிரேரணை தற்போது கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையரின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெம்பரரியாக அந்தக் கூட்டுறவு நூற்பாலையிலே போட்டவர்களை பணி நிரந்தரம் செய்ய அரசு பரிசீலித்து வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது இங்கே கூறியுள்ளார்கள்.